ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 327 ) Sep (1)/ 2020



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

# உட்பொதிவு


1. லக்ஷ்மீ தந்த்ரம் ....................................................................3

2. ஸங்கல்ப ஸூர்யோதயம் ....................................................................5

3. தத்வ த்ரயம்....................................................................7

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)....................................................................10

5. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)..........................15

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 147)

26. தபத்யேவம் பரா சக்திஸ்த்ரயீ ஸூர்யாக்யயாம்பரே
த்ரிவித்யைஷா பரா சக்தி: ப்ரக்யாதா ஸூர்யஸம்ஜ்ஞயா

**பொருள்** – இவ்விதமாக ஸூர்யன் என்று அழைக்கப்படும் உயர்ந்த சக்தியான த்ரயீ என்பது விண்ணில் ப்ரகாசிக்கிறது. ஸூர்யன் என்று அழைக்கப்படும் இந்த உயர்ந்த சக்தியானது மூன்று விதங்களில் அறியப்படுகிறது.

27. ஸாவித்ரீ நாம வேதாநாம் ஜநநீ பரிவர்த்ததே
த்ரிவர்ண ப்ரணவாதார பூர்புவ: ஸ்வஸ்த்ரிநாடிகா
28. ததாதிவர்ணபவநா சிர: கல்பிதசேகரா
க்ஷித்யாதி புருஷாந்தார்ணா ப்ரகாசாநந்த விக்ரஹா
29. உதிதா ப்ரஹ்மணோ பூயோ ப்ரஹ்மணி ப்ரதிதிஷ்டதி
வேதாநாம் ஜநநீ ஸைஷா வர்ணாநாம் ஜநநீ பரா

**பொருள்** – வேதங்களுடைய தாயாகக் கொண்டாடப்படும் ஸாவித்ரீ என்பவள் ஒலி ரூபமாக வெளிப்படுகிறாள். அவள் தனது ஆதாரமாக, மூன்று எழுத்துக்களைக் கொண்ட ப்ரணவத்தைக் கொண்டுள்ளாள். “பூ:, புவ:, ஸ்வ:” ஆகிய மூன்றும் அவளுடைய மூன்று நாடிகளாக உள்ளன. “தத் ஸவிதுர் வரேண்யம்” என்பதில் உள்ள “தத்” என்பது அவளுடைய முக்கிய ப்ராணனாக உள்ளது. அவளுடைய தலையானது “சிர:” என்ற மந்த்ரத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது (இது – ஓம் ஆபோ ஜ்யோதி ரஸோ அம்ருதம் ப்ரஹ்ம பூர்புவ: ஸுவரோம் – என்பதாகும்).

அவளுடைய சரீரமானது க்ஷிதி (அதாவது "க") மற்றும் புருஷ (அதாவது "ம") என்னும் எழுத்துக்களை உள்ளடக்கிய ஆனந்தம் கொண்டதாகும். அவள் ப்ரஹ்மத்தில் வெளிப்பட்டு, ப்ரஹ்மத்திலேயே லயிக்கிறாள். இபப்டியாக வேதங்களுடைய தாயாக உள்ள இவளே, எழுத்துக்களுடைய தாயாகவும் உள்ளாள்.

30. அநுலோமவிலோமாப்யாம் ஸௌம்யாக்நேயீ நிகத்யதே
ஸைஷா ஸூர்யவபுர்திவ்யா ஸாவித்ரீ மந்மயீ கலா

**பொருள்** – குழந்தாய்! அக்னிக்கு ஆதாரமாக உள்ள சக்தியானது இங்கு ஏறு வரிசையிலும், இறங்கு வரிசையிலும் கூறப்பட உள்ளது (அதாவது, "அ" முதல் "ஹ" முடிய உள்ளது ஏறு வரிசை ஆகும்; "க்ஷ" முதல் "ஆ" முடிய உள்ளது இறங்கு வரிசை ஆகும்). இவ்விதமாக ஸூர்ய வடிவில் உள்ளதே எனது ஸாவித்ரீ என்னும் கலை ஆகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸங்கல்ப ஸூர்யோதயம்

(பகுதி – 14)

[ஸூத்ரதாரன் நடியிடம்] உங்களுக்கு நான் மேலும் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

23. சமதந நிதிம் ஸத்த்வப்ராயம் ப்ரயோகமயோகித:
ஸ்வகுணவசத: ஸ்தோதும் யத்வா வரீவ்ரது நிந்திதும்
கிமிஹ பஹுபி: கிம் நிச்சந்நம் ந விச்வமநீச்வரம்
ததுபநிஹிதா ஜாக்ரத்யேவம் சதுர்தச ஸாக்ஷிண:

**பொருள்** – (ஸூத்ரதாரன் கூறுவது) சமம் மற்றும் தமம் ஆகிய குணங்களின் புதையலான ஸத்வகுணமே ரூபமாக உள்ள இந்த நாடகத்தை, கர்மயோகம் போன்றவற்றில் நிலை நிற்காதவர்கள், தங்களுடைய தாழ்ந்த குணங்கள் காரணமாக, புகழவோ இகழவோ செய்யட்டும். இவ்விதம் பலவற்றையும் உரைத்து என்ன பயன் உள்ளது? நமக்கு எந்த நஷ்டமும் இல்லை. இந்த உலகில் ஈச்வரனும், அவனால் நியமிக்கப்பட்ட பதினான்கு சாட்சிகளும் உள்ளனர் அல்லவோ? (பதினான்கு சாட்சிகள் – சூரியன், சந்த்ரன், காற்று, அக்னி, ஸ்வர்கம், பூமி, நீர், இதயம், யமன், பகல், இரவு, விடியற்காலை,ஸந்த்யாகாலம் மற்றும் தர்மங்கள்).

[ஸூத்ரதாரன் நடியிடம்] மேலும், விவேகம் நிறைந்தவர்களுக்குப் பொறாமை முதலான நிலைகள் அவர்களை அறியாமல் அவர்களுக்கு உண்டானாலும், மின்னல் போன்று, உண்டாகும்போதே அழிந்துவிடும்.

24. மௌனம் விப்ரது மத்ஸரேண நமிதாஸ்தூர்ணே த ஏவ த்ருவம்
காலோந்நித்ர கதம்பகோலவபுஷ: கம்பஸ்புரந்மௌலய:
கிஞ்சித் வ்ரீடிதகுஞ்சதாக்ஷமவசாதுத்தாநதத்தாநநா:
ப்ரஸ்தோஷ்யந்த்யவதிம் ப்ரயோகபதவீஸாரஸ்யஸாரஸ்ய

**பொருள்** – (ஸூத்ரதாரன் கூறுவது) அவர்கள் தங்களுடைய பொறாமை காரணமாக ஏதும் பேசாமல் மௌனமாக இருக்கட்டும். வெகு விரைவில் அவர்களுடைய ரோமங்கள் அனைத்தும், கார்காலத்தில் மலரும் கடம்ப மர மலர்களைப் போன்று, சிலிர்த்தபடி நிற்கும். அதனைத் தொடர்ந்து, தாங்கள் தவறு இழைத்ததாகத் தலையை மெதுவாக அசைத்து, நாணத்தினால் தங்களுடைய கண்களைச் சிறிதாக மூடியபடி, தங்களுடைய முகத்தி மெதுவாக உயர்த்தி, நம்முடைய இந்த நாடகத்தைக் குறித்து உயர்வாகவே பேசத் தொடங்குவார்கள்.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

# தத்வ த்ரயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 24)

50. அந்த பக்ஷத்தில், ஒருவன் ஸுகிக்கிற காலத்திலே வேறெ ஒருவன் துக்கிக்கக் கூடாது.

**அவதாரிகை -** அது அயுக்தமென்னுமிடம் ஸாதிக்கிறார்.

**விளக்கம் -** அவர்களுடைய வாதமானது பொருந்தமற்றது என்று அடுத்து கூறுகிறார்.

**வ்யாக்யானம் -** (அந்த பக்ஷத்தில்) இத்யாதியாலே. அதாவது, அப்படி ஆத்மபேதமில்லாத பக்ஷத்தில், "அஹம் ஸுகீ" என்று ஒருவன் ஸுகோத்தரனாயிருக்கிற காலத்திலே வேறே ஒருவன், "அஹம் து:கீ" என்று துக்கோததரனாயிருக்கிற இந்த ஸுகதுக்க வ்யவஸ்தை கூடாதென்கை. ஸுகது:க்கங்களிரண்டும் ஏகாச்ரயகதமாகில், உபய ப்ரதிஸந்தாநமும் ஒருவனுக்கே உண்டாகவேணுமிறே. ஆகையால் ஸுகதுக்கங்கள் நியதங்களாகையாலே ஆத்மபேதமுண்டாக வேணுமென்று கருத்து.

**விளக்கம் –** "ஆத்மாக்கள் பல அல்ல, ஒருவன் மட்டுமே" என்பதான, ஆத்மாக்களில் வேறுபாடு இல்லை என்னும் வாதத்தில், "அஹம் ஸுகீ - நான் சுகமாக உள்ளேன்" என்று ஒருவன் சுகம் நிறைந்தவனாகவும், வேறு ஒருவன் "அஹம் து:கீ - நான் துக்கமாக உள்ளேன்" என்று துக்கம் நிறைந்தவனாகவும், இவ்விதமாக சுகதுக்க வேறுபாடுகள் இருக்கக்கூடாது அல்லவோ? சுகம் மற்றும் துக்கம் ஆகிய

இரண்டும் ஒரே இடத்தில் உள்ளது என்றால், இரண்டுவிதமான நிலையும் ஒருவனுக்கு ஒரே நேரத்தில் உண்டாக வேண்டும் அல்லவோ? ஆகவே சுகம் மற்றும் துக்கம் ஆகிய இரண்டும் தனித்தனியே ஏற்படுவதால், ஆத்மாக்களில் வேறுபாடு உண்டு; அதாவது, பல ஆத்மாக்கள் உள்ளனர் என்று கருத்து.

51. அது தேஹ பேதத்தாலே என்னில்.

**அவதாரிகை** - அந்த ஸுகதுக்க வ்யவஸ்தைக்கு ஹேது "தேஹ பேதம்" என்கிறவர்களுக்தியை அநுவதிக்கிறார் (அது தேஹபேதத்தாலே என்னில்) என்று.

**விளக்கம்** - "அத்தகைய சுகம் மற்றும் துக்கம் ஆகிய வேறுபாடுகளுக்குக் காரணம், சரீரங்கள் பலவாக உள்ளன என்பதே ஆகும்", என்று சிலர் கூறுகிறார்கள். அந்த வாதத்தை இவர் எடுத்துக் கூறுகிறார்.

52. ஸௌபரி சரீரத்திலும் அது காணவேணும்.

**அவதாரிகை** - அதுக்கு அநுபபத்தி சொல்லுகிறார்.

**விளக்கம்** – அந்த வாதத்தில் உள்ள பொருந்தம் இன்மையை அடுத்து உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** - (ஸௌபரி சரீரத்திலும் அது காணவேணும்) என்று. அதாவது, தேஹபேதம் ஸுகதுக்க நியமத்துக்கு ஹேதுவாகில், அநேக தேஹ பரிக்ரஹம் பணணின ஸௌபரி சரீரத்திலும் அந்த நியமம் காணவேணுமென்கை. தேஹபேதம், ஸுகதுக்க நியமத்துக்கு ஹேதுவன்றாகில், ஜந்மாந்தராநுபவத்தை இஜ்ஜந்மத்திலே ஸ்மரிக்க வேண்டாவோ? என்னில், ஸ்மரியாதொழிகிறது ஸம்ஸ்காரத்தினுடைய அநுத்பவத்தாலேயாதல், நாசத்தாலேயாதல். சரீராந்தரத்தில் ஸுகதுக்க ஸ்மருத்யாதிக ளின்றிக்கே ஒழிகிறதும் இரண்டத்தொன்றாலே யென்னில், ஒரு சரீரந்தன்னிலும் ஸ்ம்ருதி கூடாதொழியவேணும். ஆகையால் ஸுகதுக்க நியமத்துக்கு ஹேது, தேஹபேதம் என்னவொண்ணாது.

**விளக்கம் -** சரீரங்களில் உள்ள வேறுபாடுகளே, சுகம் மற்றும் துக்கம் ஆகிய வேறுபாடுகளுக்கும் காரணம் என்று கொண்டால், பல சரீரங்கள் எடுத்த ஸௌபரி முனிவரின் சரீரத்திலும் அந்த விதிமுறையை நாம் காணவேண்டும் அல்லவோ? சரீரங்களில் உள்ள வேறுபாடுகள், சுகம் மற்றும் துக்கம் ஏற்படுவதற்கான காரணம் அல்ல என்றால், கடந்த பிறவிகளில் அனுபவித்த சுகம் மற்றும் துக்கங்கள் இந்தப் பிறவியிலும் நினைவிற்கு வரவேண்டும் அல்லவோ என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். இவ்விதம் நினைவில் வராமல் இருப்பதற்குக் காரணம், ஞானமானது மறைக்கப்பட்டு ஸம்ஸாரம் வெளிப்படாமல் இருத்தல் அல்லது அதன் அழிவு காரணமாக அதில் அல்லது வேறு சரீரத்தில் சுகதுக்கங்களின் ஞாபகம் இன்றிப்போதல் ஆகிய இரண்டில் ஒன்று என்றால், ஒரு சரீரத்திலும் நினைவுகள் ஏற்படாமல் இருத்தல் வேண்டும். ஆகவே சுகதுக்கங்களுக்கான காரணம் சரீரத்தில் உள்ள வேற்றுமை என்று கூறுதல் பொருந்தாது.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 292)

4-6-6 தணியும் பொழுதில்லை நீரணங்காடுதீர் அன்னைமீர்
பிணியும் ஒழிகின்றதில்லை பெருகுமிதுவல்லால்
மணியினணி நிறமாயன் தமரடி நீறு கொண்டு
அணிய முயலின் மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கே

**பொருள்** - தாய்மார்களே! நீங்கள் தவிர்வது ஒரு காலம் என்று உணராமல், அணங்கு ஆடியபடி உள்ளீர்கள். இதனையே காரணமாகக் கொண்டு இவளுடைய நோயானது பெருகியபடி உள்ளது அல்லாமல் நீங்கவில்லை. இந்த நோய் விலகுவதற்கான பரிகாரம் என்னவென்றால், நீல நிற இரத்தினக்கல்லைக் காட்டிலும் மேன்மையான திருமேனி நிறம் கொண்டவனும், வியக்க வைக்கும் செய்கைகள் புரிபவனும் ஆகிய க்ருஷ்ணனுடைய ஸம்பந்தம் கொண்டுள்ள பாகவதர்களுடைய பாததுகள்களைக் கொண்டு வந்து இவளுக்குப் பூச முயல்வதே ஆகும். அத்தகைய செயல் அல்லாமல் இந்தத் தெய்வீகமான பெண்ணிற்கு வேறு எந்தப் பரிகாரமும் இல்லை.

**அவதாரிகை** - இப்பெருநேர்த்தியெல்லாம் வேண்டா; “தவளப்பொடி” என்று சொன்னது இன்னதென்று விசேஷித்து அத்தைச்செய்ய உத்யோகிக்கவே இவள் நோய் தீரும் என்கிறாள்.

**விளக்கம்** - நீங்கள் செய்கின்ற இத்தகைய பெரிய முயற்சிகள் ஏதும் அவசியம் இல்லை. “தவளப் பொடி” என்று கூறியது இன்னது எனச் சிறப்பாக அறிந்து கொண்டு, அதனைச் செய்ய முயலும்போதே இவளுடைய இந்த நோயானது விலகும்.

**விளக்கம்** - (தணியும் இத்யாதி) நிஷேதிப்பாருண்டாகையாலே “இன்னபோது தவிரச் சொல்லுவர்கள்” என்று அறியாமையாலே, உச்சிவீடுவிடாதே அவர்கள் ஆடத் தொடங்கினார்கள். (பிணியும் இத்யாதி) காரணாநுவ்ருத்தியாலே கார்யமும் அநுவர்த்தியா நின்றது. (பெருகும் இதுவல்லால்) கிண்ணகப் பெருக்குப் போலே மேன்மேலெனக் கிளர்ந்து வாராநின்றது. (மணியின் இத்யாதி) நீலமணி போலே அழகிய நிறத்தையுடையனாய், குண சேஷ்டிதங்களால் ஆச்சர்யபூதனானவனுடையாருடைய பாதரேணுவைக் கொண்டு வந்து அணிய உத்ஸாஹிக்கில். விசிஷ்ட குலத்திற் பிறந்த அபவாதமாகையாலே, ப்ராயச்சித்தத்தைக் கனக்க விதித்தோமத்தனை; அது தன்னின் ப்ரபாவத்தைப் பார்த்தால் இதெல்லாம் வேண்டா; உத்யோக மாத்ரம் அமையும். “தொண்டரடிப்பொடியாட நாம் பெறில் கங்கைநீர் குடைந்தாடும் வேட்கை யென்னாவதே” என்றாரிறே. “ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்ய வர்ஜநம்” அநுகூல்யத்தில் ஸங்கல்ப மாத்ரமே அமையும் ப்ராதிகூல்யத்தில் வர்ஜ்ஜநமே வேணும்.

**விளக்கம்** - (தணியும் இத்யாதி) - இந்தச் செயல்களைத் தவிர்ப்பவர்களும் உள்ளனர் என்பதால், “இன்னபோது இதனைத் தவிர்க்க வேண்டும்” என்ற அறியாமையால் அவர்கள் ஆடியபடி உள்ளனர். (பிணியும் இத்யாதி) - காரணமானது தொடர்ந்தபடியே உள்ளதால், கார்யமும் தொடர்ந்தபடி உள்ளது. (பெருகும் இதுவல்லால்) - இவளுடைய நோயானது ஆற்றுவெள்ளம் போன்று மேன்மேலும் பெருகியபடியே உள்ளது. (மணியின் இத்யாதி) – நீல இரத்தினக்கல்லைப் போன்று அழகான திருமேனி நிறம் கொண்டவன். தனது குணம் மற்றும் செய்கைகளால் வியப்பை ஏற்படுத்துபவன். இப்படிப்பட்ட அவனுடைய அடியார்களின் பாததுகள்களைக் கொண்டு வந்து இவளுக்குப் பூச முயன்றால். “ஆனால் முயற்சி செய்தால் போதுமா? அதனைப் பூச வேண்டாமா?”, என்று கேட்கலாம். இதற்கு

விடை அருளிச்செய்கிறார். மிகவும் ஒழுக்கத்துடன் உள்ள ஒரு குலத்திற்கு ஏற்பட்ட பழி என்பதால் ப்ராயச்சித்தத்தை மிகவும் கடினமாக விதித்தோம்; ஆனால் பாத துகள்களுடைய வைபவத்தை ஆராயும்போது, அதனை பூசுதல் என்பது போன்று செயல்களை கூடச் செய்யவேண்டாம்; முயற்சி செய்தாலே போதுமானது. பெருமாள் திருமொழி (2-2) - தொண்டரடிப்பொடியாட நாம் பெறில் கங்கைநீர் குடைந்தாடும் வேட்கை யென்னாவதே – என்றார் அல்லவோ? ஏற்புடைய செயல்களைச் செய்தல் என்பதை எண்ணினாலே போதுமானது; ஆனால் தீய செயல்களைப் பொறுத்தவரை, கைவிடுதல் என்னும் எண்ணம் மட்டும் போதமானது அல்ல, அவற்றைக் கைவிடுதல் என்பதும் அவசியமாகிறது.

**வ்யாக்யானம்** - (மாயன் தமரடி நீறு கொண்டு) வண்டரும் சொண்டரும் என்கிறவர்களுக்கு அரையன் சொன்ன வார்த்தைக்குப் பிள்ளையுறங்காவில்லிதாசர் பரிஹாரம் பண்ணினபடியை நினைப்பது. அதாவது, அகளங்கநாட்டாழ்வான் இவர்களுக்கு அமணன்பாழியில் ஸிம்ஹத்தைக் காட்டி, “திருமுற்றம்; திருவடி தொழுங்கோள்” என்ன, அவர்களும் மெய்யென்று திருவடி தொழுது, “அது அமணன்பாழி” என்று அறிந்தவாறே மோஹித்து விழ, பிள்ளையுறங்காவில்லிதாஸர்தம் ஸ்ரீபாததூளியை அவர்களுக்கு இட, உணர்த்து எழுந்திருந்தார்கள். திருக்கொட்டாரத்தினருகே கைந்நிரை கட்டிக் கொண்டிருக்கிற நாளிலே, சீயர் இத்திருவாய்மொழியருளிச் செய்கிறாராய் இவ்வளவிலே வந்தவாறே, “தேர்ப்பாகனார்க்கு என்று நோவுக்கு நிதாநம் சொன்னாளாகில், அவனையிட்டுப் பரிஹரியாதே, ‘மாயன் தமரடி நீறு கொண்டு அணிய முயலின்’ என்று இத்தைப் பரிஹாரமாகச் சொல்லுவான் என்? நோவுக்கு நிதாநமொன்றும் பரிஹாரமொன்றுமாயோ இருப்பது?” என்று நான் கேட்டேன்; “மோர்க்குழம்பு இழியாதே மோஹித்துக் கிடந்த ஸமயத்தில் சுக்கிட்டு ஊதிப் பின்பு மோர்க்குழம்பு கொடுத்துப் பரிஹரிப்பாரைப் போலே, ‘தேர்ப்பாகனார்க்கு’ என்றபோதே அவரைக் கொடுவந்து காட்டப் பெறாமையாலே, முற்பட இவ்வழியாலே ஆச்வஸிப்பித்துப் பின்னை அவனைக் கொண்டு வந்து காட்டுவதாகக் காணும்” என்று அருளிச்செய்தார்.

**விளக்கம்** - (மாயன் தமரடி நீறு கொண்டு) - வண்டர் மற்றும் சொண்டர் ஆகிய இருவருக்கும் அரையன் கூறிய சொற்களுக்குப் பிள்ளை உறங்காவில்லிதாஸர் பரிகாரம் செய்தவிதத்தை இங்கு நினைத்துப் பார்க்கலாம். இவர்கள் இருவரும் அகளங்க நாட்டாழ்வான் என்பவனுடன் சென்று கொண்டிருந்தபோது, வழியில் இருந்து ஒரு சமணர் கோயில் முன்பாகக் காணப்பட்ட சிங்க சிற்பத்தை அவர்களுக்கு அவன் காண்பித்து, “இது எம்பெருமானுடைய திருக்கோயில் முன்வாசல் ஆகும். இதனைத் தொழுவீர்களாக”, என்றான். அவர்களும் அதனை எம்பெருமானுடைய திருக்கோயில் என்று எண்ணித் தொழுதனர். பின்னர், அது ஒரு சமணர் கோயில் என்று அறிந்தபோது மயங்கி விழுந்தனர். அப்போது பிள்ளை உறங்காவில்லிதாஸரின் பாத துகள்களை அவர்களுக்கு இட, அவர்களும் கண் விழித்தார்கள். திருவரங்கத்தில் உள்ள திருக்கொட்டாரம் அமைந்துள்ள பகுதியில், கைகள் கொண்டு, தங்கும் குடிசைகள் அமைப்பது வழக்கம் ஆகும். கோயிலின் வெளியில் ஏதேனும் ஆபத்து நேரிட்டால் இங்கு வந்து மக்கள் தங்குவார். அவ்விதம் நஞ்சீயர் ஒருமுறை அமைத்துக் கொண்டிருந்தபோது திருவாய்மொழி வ்யாக்யானத்தின் இந்த இடத்தை விளக்கியபடி இருந்தார். அந்த நேரத்தில் அவரிடம் வந்த நம்பிள்ளை, திருவாய்மொழி (4-6-1) – தேர்ப்பாகனார்க்கு – என்பதில், இவளுடைய நோய்க்கான காரணம் ஸர்வேச்வரனே ஆவான் என்றீர். ஆனால் இங்கு, அந்தத் தேர்ப்பாகனுடைய திருவடித் துகள்கள் கொண்டு இந்த நோயை நீக்க முயலாமல், அவனுடைய அடியார்களுடைய திருப்பாத துகள்கள் கொண்டு நீக்க முயல்கிறீர். நோய்க்கான காரணம் ஒன்று, பரிகாரம் வேறாக உள்ளது எப்படி?”, என்று கேட்டார். இதற்கு நஞ்சீயர், “மோர்க்குழம்பு சேராமல் மயக்கத்தில் கிடந்த ஒருவருக்கு, முதலில் சுக்கு கொண்டு ஊதி, அதன் பின்னர், மோர்க்குழம்பு அளிப்பர். அது போன்று, தேர்ப்பாகனைக் கொண்டு வந்து காண்பிக்க இயலாமையால், முதலில் அவன் அடியார்களுடைய திருப்பாத துகள்கள்மூலம் இவளைத் தேற்றி, அதன் பின்னர் அவன் விஷயத்தில் முயல்வர்”, என்றார்.

**வ்யாக்யானம்** - (மணியின் இத்யாதி) *ஸௌந்தர்ய சீலாதிகளாலேயாயிற்று இவள் மோஹித்தது; நீங்களும் ஸௌந்தர்ய சீலாதிகளிலே தோற்றிருக்கும் ஶ்ரீவைஷ்ணவர்களுடைய பாதரேணுவைக் கொண்டு பரிஹரிக்கப் பாருங்கோள்.*

பொடிபடத் தீரும். (மற்ற இத்யாதி) இதல்லது பரிஹாரமில்லாதபடியான வைலக்ஷண்யத்தையுடைய இவளுக்கு இத்தையே பரிஹாரமாகப் பாருங்கோள்.

**விளக்கம் -** (மணியின் இத்யாதி) **-** அவனுடைய அழகு மற்றும் சீலம் ஆகியவற்றைக் கண்டு இவள் மயக்கம் அடைந்தாள். நீங்களும், அதனைப் போன்றே அவனுடைய அழகு மற்றும் சீலம் ஆகியவற்றை கண்டு மயங்குகின்ற ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருப்பாத துகள்கள் கொண்டு பரிகாரம் செய்ய முயல்வீர்களாக. அந்தத் துகள்கள் இவள் மீது படும்போது இவளுடைய நோயானது விலகும். (மற்ற இத்யாதி) **-** "இது அல்லாமல் வேறு பரிகாரம் இல்லை" என்று கூறும்படியான மேன்மை கொண்ட இவளுக்கு, இதனையே பரிகாரமாகச் செய்ய முயல்வீராக.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

# ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 8)

**வ்யாக்யானம் -** அங்ஙனேயாகில், ஸ்வாசார்யனை விட்டு அவர் குருக்களைப் பற்றுவானென்? என்னில்: ஆசார்ய ஸ்துதியிலும் ஆசார்ய ப்ரியமிறே உத்தேச்யம்; ஸ்வாச்ரயணத்திற்காட்டில், பெரியமுதலியாரை ஆச்ரயிக்குமிடத்தில் ப்ரீதி மிக்கிருக்கையாலே, அதைப் பேசுகிறார். பெரியமுதலியார், ஆழ்வாருக்கு பகவத் ப்ராவண்யமடியாகப் பிறந்த ஜ்ஞானத்தை ஆழ்வார் ப்ரஸாதத்தாலே பெற்று, தம்மளவிலே பர்யவஸிக்கையன்றிக்கே, பின்புள்ளார்க்கும் உபகாரமாம்படி, இத்தர்சந ஸ்தாபகரானபடியாலும், மணக்கால்நம்பி, "பெரியமுதலியாருடைய அர்த்தம் இது; உம்முடைய பேற்றுக்கெல்லாம் அவருடைய திருவடிகளிலே ஸம்பந்தமே" என்கையாலும், அவரை ஆச்ரயிக்கிறார். இதை நினைத்திறே பட்டர், "ப்ரதமமபி குரும் நாதமீடே" என்றதும். வேதகாரணமான ப்ரணவம், வேதாத்யந்தங்களிலே ஆனாப்போலே, இங்கும் ஆத்யந்தங்களிலே ஆசார்ய ஸ்துதியாய், நடுவிலே பகவத் ஸ்தோத்ரமாக இருக்கிறது. முதலிட்டு மூன்று ச்லோகத்தாலே பெரியமுதலியாரை நமஸ்கரிக்கிறார்.

**விளக்கம் -** இவ்விதமானால், இவர் தனது நேரடியான ஆசார்யனை விடுத்து, ஆசார்யனுடைய ஆசார்யர்களை ஏன் துதிக்கவேண்டும்? இதற்கு விடை அளிக்கிறார். ஆசார்யனைத் துதிப்பதைக் காட்டிலும் ஆசார்யனுக்கு விருப்பமாக உள்ள விஷயங்களில் ஈடுபடுதலே சிறப்பாகும். தனது ஆசர்யனைத் துதிப்பதைக்

காட்டிலும், ஸ்வாமி நாதமுனிகளை அண்டி, அவரைத் துதிக்கும்போது மகிழ்வு அதிகமாக உள்ளதால், அதனை உரைக்கிறார். ஸ்வாமி நம்மாழ்வாருக்கு பகவத் க்ருபையால் பிறந்த ஞானத்தை, நம்மாழ்வாருடைய க்ருபை மூலமாக நாதமுனிகள் பெற்றார். அத்தகைய ஞானமானது தன்னுடன் நின்றுவிடாமல், தனக்குப் பின்னர் வர உள்ளவர்களுக்கும் உண்டாகவேண்டும் என்று எண்ணினார். ஆகவே நம்முடைய தர்சநத்திற்கு ஸ்தாபகராக உள்ளதாலும்; ஸ்வாமி மணக்கால்நம்பி, "நாதமுனிகளுடைய கருத்து இதுவாகும்; உம்முடைய அனைத்து பேறுகளுக்கும் காரணம், நீவிர் அவருடைய திருவடிகளுடன் கொண்ட ஸம்பந்தமே ஆகும்", என்று உரைப்பதாலும், ஆளவந்தார் நாதமுனிகளை அண்டுகிறார். இதனைக் கருத்தில் கொண்டே ஸ்வாமி பராசரபட்டர் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் - ப்ரதமமபி குரும் நாதமீடே – முதல் ஆசார்யனாகிய நாதமுனிகளைத் துதிக்கிறேன் - என்றார். வேதத்தின் காரணமாக உள்ள ப்ரணவமானது, வேதங்களுடைய தொடக்கம் மற்றும் இறுதிப்பாகம் ஆகியவற்றில் உள்ளது போன்று, இங்கும் தொடக்கம் மற்றும் இறுதி ஆகியவற்றில் ஆசார்யனைத் துதிக்கும் துதியாகவும், மத்தியில் பகவானைத் துதிப்பதாகவும் இது உள்ளது. முதல் மூன்று ச்லோகங்கள் மூலம் நாதமுனிகளை நமஸ்காரம் செய்கிறார்.

ஸ்தோத்ரரத்ன வ்யாக்யான அவதாரிகை ஸம்பூர்ணம்

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்